NHS
Blood and Transplant

# உடலுறுப்புத் தானமும் மத நம்பிக்கைகளும்

உடலுறுப்புத் தானம் மற்றும் இந்து மத நம்பிக்கைகளுக்கான ஒரு வழிகாட்டி

A guide to organ donation and Hindu beliefs (Tamil)

### நான் எவ்வாறு உடலுறுப்புத் தானமளிப்பவராகலாம்?

நீங்கள் உங்கள் இறப்பின்மேல் உடலுறுப்புத் தானம் செய்ய விரும்பினால், உங்கள் விருப்பத்தைப் பதிவு செய்யும்பொருட்டு, தேசிய உடல்நல சேவையின் உடலுறுப்புத் தானமளிப்பவர்கள் பதிவேட்டில் (NHS Organ Donor Register) இணைந்துகொள்ளவேண்டும். உங்களுடன் மிக நெருங்கியவர்கள் உங்கள் விருப்பங்களை அறிந்திருக்கும் பொருட்டு, உங்கள் முடிவு பற்றி அவர்களுடன் கலந்துரையாடவும். உங்கள் பெயரைப் பதிவேட்டில் எளிதாகவும் விரைவாகவும் இணைத்துக்கொள்ளலாம்:

இணையவழியாகக் கீழ்க்கண்ட இணையத்தளத்தில் பதிவு செய்யலாம்:
**organdonation.nhs.uk**

அல்லது கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கத்தை அழைக்கலாம்:
**0300 123 23 23**

உடலுறுப்புக்கள் மற்றும் உயிர்த்தசை இழைமங்களைத் தானம் செய்வது பற்றி மேலும் விபரம் அறிவதற்குக் கீழ்க்கண்ட இணையத்தளத்தை நாடவும்:

**organdonation.nhs.uk**

OLC229L4 2012 Hindu (Tamil)

NHS
Blood and Transplant

# Organ donation and religious beliefs

**A guide to organ donation and Hindu beliefs (Tamil)**

### How do I become a donor?

If you decide you would like to become a donor on your death, you need to join the NHS Organ Donor Register to ensure your wishes are recorded. Discuss your decision with those closest to you so that they are aware of your wishes. Adding your name to the register is simple and quick:

You can register online at
**organdonation.nhs.uk**

Or call **0300 123 23 23**

To find out more about organ and tissue donation, visit

**organdonation.nhs.uk**

OLC229L4 2012 Hindu (Tamil)

# இந்து மதமும் உடலுறுப்புத் தானமும்

## உடலுறுப்புத் தானம்

மாற்றுறுப்புப் பொருத்தல் தேவைப்படும் மற்றொருவருக்கு உதவுமுகமாகத், தனது உறுப்பை அன்பளிப்புச் செய்வது உடலுறுப்புத் தானமளித்தல் எனப்படுகிறது. ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான மக்களின் உயிர்கள் மாற்றுறுப்பு பொருத்தலால் பாதுகாப்புப் பெறுகின்றன, அன்றேல் சீர் பெறுகின்றன.

இறந்துவிட்ட ஆட்களால் தானமளிக்கப்படக்கூடிய உறுப்புக்களில் இருதயம், சுவாசப்பைகள், சிறுநீரகங்கள், ஈரல், கணையம் மற்றும் சிறுகுடல் என்பன உள்ளடங்கும். தோல், எலும்பு, இருதய வால்வுகள் மற்றும் விழிவெண்படலம் போன்ற இழைமங்களும் மற்றவர்களுக்கு உதவப் பயன்படுத்தப்படலாம்.

தானமளித்தல் என்பது தனிப்பட்ட ஒருவரின் சொந்தத் தெரிவு ஆகும். ஒரே மதக்குழுக்களிலும்கூட இதுபற்றி வெவ்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

## ஏன் உடலுறுப்புகளைத் தானமளிப்பது பற்றிச் சிந்திப்பது முக்கியம்?

மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களின் விளைவாக, சிறுநீரக, ஈரல், இருதய நோய்கள் போன்ற மரணாபத்து விளைவிக்கும் நோய் வகைகளால் அவஸ்தைப்படுவோரது உயிர்களைக் காக்கும் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கு, மாற்று உடலுறுப்புக்களையும் இழைமங்களையும் பயன்படுத்துவது தற்போது சாத்தியமாகியுள்ளது. முன்னரிலும் பார்க்க மேலும் அதிகமான மக்கள் இவ்வாறான நோய்களால் இன்று பாதிக்கப்படுகிறார்கள். சில இனக்குழுக்கள் ஏனையோரைவிட அதிகம் பாதிப்படைவதாக அறியப்படுகிறது.

இன்று உடலுறுப்புத் தேவைப்படும் ஒருவர் உங்களுக்கு அந்நியராக இருக்கலாம். நாளை அவர் நீங்கள் அறிந்த, உங்கள் அத்தியந்த அன்புக்குரிய ஒருவராக இருக்கக்கூடும். ஆகவே தயவு செய்து ஓர் உடலுறுப்புத் தானமளிப்பவராக வருவது பற்றிச் சாவகாசமாகச் சிந்திக்கவும். அத்துடன் உங்கள் சிந்தனைகளை உங்கள் அன்புக்குரியவர்களுடன் கலந்து ஆலோசிக்கவும்.

## சம்மதம்

உடலுறுப்புக்கள் தானம் செய்யப்படுவதற்கு முன்னதாகத், தானமளிக்க முன்வருபவருக்கு மிக நெருக்கமானவர்களது சம்மதம் அல்லது அனுமதி எப்போதும் கோரப்படுகிறது. இதனால்தான் நீங்கள் உடலுறுப்பைத் தானம் செய்யத் தீர்மானிப்பதற்கு முன்னர் உங்கள் விருப்பங்களை உங்கள் அன்புக்குரியவர்களுடன் கலந்தாலோசிப்பது முக்கியம் எனறு கருதப்படுகிறது. உடலுறுப்புத் தானத்துக்கு இணங்கும் குடும்ப உறுப்பினர் பலர், தமது இழப்பின் மத்தியில் ஒரு நன்மையான காரியம் நடந்துள்ளதே என்றறியும்போது தமக்கு மனநிறைவு ஏற்படுவதாய்க் கூறியுள்ளனர்.

## உடலுறுப்புத் தானம் எப்போது நடைபெறலாம்?

மருத்துவர்களும் அவர்களது சகாக்களும், உயிர் ஒன்றைப் பாதுகாப்பதற்காக, இயலுமான அனைத்தையும் செய்வதற்கு தம்மை அர்ப்பணித்தவர்களாகச் செயற்படுகின்றனர். உயிர் காக்க எடுக்கப்படும் அனைத்து முயற்சிகளும் தோற்றுப்போய், இறப்புச் சம்பவித்துவிட்டது என்று மாற்றுறுப்புப் பொருத்துப் பணிக்குழுவிலிருந்து முற்றிலும் வேறுபட்ட, சுயாதீனமான மருத்துவர்கள் சான்றுப்படுத்தியதன் பின்னரே உறுப்புக்கள் அகற்றப்படுகின்றன.

ஐக்கிய இராஜ்யத்தில் தானம் செய்யப்படும் பெரும்பாலான உடலுறுப்புக்கள், தீவிர சிகிச்சைப் பிரிவில் வென்டிலேட்டர் எனும் காற்றூட்டப் பொறியில் வைத்திருக்கப்படும், பாரிய மூளைக் காயத்தினால் இறந்துபோவோரிடமிருந்தே பெறப்படுகின்றன. மூளையில் ஏற்பட்ட காயம், உயிரைத் தக்கவைத்துக்கொள்வதற்கு அவசியமான மூளையில் உள்ள கேந்திர நிலைகளைச் சேதப்படுத்தியிருக்கும். இதனை மருத்துவர்கள் 'மூளை நடுத்தண்டு இறப்பு' என்று கூறுவார்கள். இது கோமா எனும் ஆழ்ந்த மயக்க நிலையில் இருத்தல் அல்லது 'தொடர் செயலற்ற நிலையில்' இருத்தல் போன்ற ஒன்றல்ல. இது எப்போது சம்பவித்தது என்று முற்றாகத் தீர்மானிக்கும் நோக்குடன் மிகவும் தீவிர வழிகாட்டலின் கீழ் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. மூளை நடுத்தண்டு இறப்பு சம்பவித்துள்ளதாகச் சான்றுப்படுத்தி அறிவிக்கப்பட்டபின்னரும் நோயாளி காற்றூட்டப் பொறியில் தொடர்ந்து இருக்கலாம். அவரது இருதயத் துடிப்புத் தொடர, அதனால் உடலெங்கும் இரத்தச் சுற்றோட்டம் தொடர்ந்து நடைபெறலாம். இது ஒரு நலமான மாற்றுறுப்புப் பொருத்தலுக்கு அவசியமான பிராணவாயு நிறைந்த இரத்தத்தை உறுப்புக்கள் இழந்துவிடாது தடுக்கிறது.

இருதயத் துடிப்பு நின்றுவிட்டதால் இறப்பு சம்பவித்ததாகச் சான்றுப்படுத்தப்படும் ஆட்களது உடலுறுப்புக்களும் தானம் செய்யப்படலாம். 'இருதயத் துடிப்பு நின்றுவிட்ட' உடலுறுப்புத் தானமளிப்பவர்களது இறப்புச் சான்றுப்படுத்தலும் மாற்றுறுப்புப் பொருத்தும் பணிக்குழுவிலிருந்து முற்றிலும் வேறுபட்ட, சுயாதீனமான மருத்துவர்களாலேயே வழங்கப்படுகிறது.

## கவனிப்பும் மரியாதையும்

உடலுறுப்புக்களையும் இழைமங்களையும் அகற்றும் பணி மிகுந்த கவனிப்புடனும் மரியாதையுடனும் மேற்கொள்ளப்படுகிறது. குடும்பத்தினர் பின்னர் உடலைப் பார்க்க இயலும். அவர்களுக்கு விருப்பமானால், பணியாளர்கள் மதகுரு ஒருவரை அல்லது அப்பகுதி மதத் தலைவர் ஒருவரை வரவழைக்க ஏற்பாடு செய்யலாம்.

## இந்து மதமும் உடலுறுப்புத் தானமும்

இந்து மதக் கோட்பாட்டு நூல்களில் உடலுறுப்புத் தானமளித்தலுக்கு ஆதரவான பல குறிப்புரைகள் உள்ளன. தானம் என்பது சமஸ்கிருதத்தில் தானமளித்தலைக் குறித்து நிற்கும் மூலச்சொல்லாகும். அதன் பொருள் தன்னலமறக் கொடுத்தல் என்பதாகும். பத்து நியமங்கள் (புண்ணிய செயல்கள்) கொண்ட பட்டியலில் தானம் மூன்றாவதாக வருகிறது.

**"தானமளித்தல் அனைத்திலும் உங்கள் உடலைத் தானமளிப்பது பயன்மிக்கதொரு செயலாகும்."**
மானுஸ்மிருதி

**"மற்றவர் மகிழ்ச்சியிலேயே எங்கள் மகிழ்ச்சியைக் காணலாம்."**
BAPS ஸ்வாமி நாராயண் சந்ஸ்தாவின் அருள்திரு பிரமுக் ஸ்வாமி மகராஜ்

இறப்புக்குப் பின்னரும் வாழ்வு உண்டு என்பதும் மறுபிறப்பு என்பது தொடரும் நியதி என்பதும் இந்துக்கள் கொண்டுள்ள ஆழமான நம்பிக்கையாகும். அடுத்த பிறப்பில் ஆன்மா செல்லும் வழியைக் கர்மவினை தீர்மானிப்பதாகக் கருதப்படுகிறது. அழியும் உடலையும் அழியாத ஆன்மாவையும் பகவத் கீதை, உடலுடன் அதனைப் போர்த்தும் ஆடைக்கு உள்ள தொடர்புடன் ஒப்பிட்டு மிக இலகுவாக வர்ணிக்கிறது:

**"வஸம்ஸி ஜிர்னானி யாத விஹாய நவானி கிர்ஹநாட்டி நாரோ பரணி ததா சரிராானி விஹாய ஜிர்நானி அன்யானி ஸமியாட்டி நவந்தி தெஹி"**
பகவத் கீதை, அத்தியாயம் 2.22

**"ஆளொருவர் பழைய ஆடைகளைக் களைந்து புத்தாடைகளை அணிவது போன்று ஆன்மாவும் பழைய பயனற்ற உடல்களை விட்டுவிட்டு புதியவற்றை ஏற்றுக்கொள்கிறது."**
பகவத் கீதை, அத்தியாயம் 2:22

அறிவியல் மற்றும் மருத்துவ ஆய்வுநூல்கள் (சாரகா மற்றும் சுஷ்ருத்த ஸமித) வேதங்களின் ஒரு முக்கிய பாகமாக அமைந்துள்ளன. ஞானி சாரகா, நோயைக் கண்டுபிடித்து அறுவைச் சிகிச்சையின்றிக் குணப்படுத்தும் உள்மருத்துவத்தில் கவனம் செலுத்த, ஞானி சுஷ்ருத்த உறுப்புக்களையும் அங்கங்களையும் மாற்றிப் பொருத்துவது பற்றிய அம்சங்களையும் உள்ளடக்கி மருத்துவத்தை ஆராய்ந்துள்ளார்:

**"உடலுறுப்புத் தானம், ஏனையவர் உயிரைக் காப்பாற்ற உதவலாம் என்கிற வகையில் இந்து மத நம்பிக்கைகளுக்கு ஏற்புடையதாக அமைந்துள்ளது."**
தேசிய இந்துக் கோவில்கள் கவுன்சிலின் (National Council of Hindu Temples) தலைவரான காலஞ்சென்ற திரு ஓம் பிரகாஷ் ஷர்மா MBE

**"எனது தானமளித்தல் அட்டையை எப்போதும் என்னுடன் கொண்டு செல்வேன். எனது இறப்புக்குப் பின்னர் எனது உடல் முழுவதும் உடலுறுப்புத் தானத்துக்கும் மருத்துவ தேவைகளுக்கும் பயன்படுத்தப்படலாம் என்று அது கூறுகிறது. இதனையே செய்யுமாறு எத்தனை அதிகம் பேருக்குச் சொல்ல முடியுமோ அத்தனை பேருக்கும் சொல்லி ஊக்கப்படுத்த விரும்புகிறேன்."**
இந்து சர்வதேச மருத்துவ மிஷன் (Hindu International Medical Mission) இணைப்பாளரும் ஐக்கிய இராஜ்ய இந்து கவுன்சில் (Hindu Council UK) முன்னாள் தலைவருமான காலஞ்சென்ற வைத்திய கலாநிதி பால் முகுந்த் பாலா

**"உடலுறுப்புத் தானத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு. எனது உடலிலிருந்து என் ஆன்மா அகன்றபின்னர் எனது உடல் எவருக்கேனும் மேம்பட்ட வாழ்வு வாழ உதவுமானால், அது நல்லதொரு சேவையாக அமையும்."**
பிரித்தானிய இந்து சபையின் (Hindu Forum of Britain) காலஞ்சென்ற தலைவரான திரு அர்ஜன் வெகாரியா ஜீ

இந்து மதம் பற்றிய தகவல்கள் கீழ்க்கண்ட இணையத்தளத்தில் கிடைக்கும்:
**www.bbc.co.uk/religion**

# Hinduism and organ donation

## Organ donation

Organ donation is the gift of an organ to help someone else who needs a transplant. Hundreds of people's lives are saved or improved each year by organ transplants.

Organs that can be donated by people who have died include the heart, lungs, kidneys, liver, pancreas and small bowel. Tissue such as skin, bone, heart valves and corneas can also be used to help others.

Donation is an individual choice and views differ even within the same religious groups.

## Why is it important to think about donating organs?

With medical advances it is now possible to use transplanted organs and tissues to enhance the life chances of those suffering from a range of terminal conditions such as renal, liver and heart failure. More people than before now suffer from these conditions and some ethnic groups seem to be more affected than others.

Today the person in need of an organ may be a stranger, but tomorrow it could be someone you know and love dearly.So please take the time to think about becoming an organ donor and discuss your thoughts with loved ones.

## Consent

The consent or permission of those closest to the potential donor is always sought before organs can be donated. This is why it is so important to discuss your wishes with your loved ones should you decide to become a donor. Many families who agree to organ donation have said that it helps to know some good has come from their loss.

## When can organ donation take place?

Doctors and their colleagues are committed to doing everything possible to save life. Organs are only removed for transplantation once all attempts to save life have failed and after death has been certified by doctors, who are entirely independent of the transplant team.

Most donated organs in the UK come from people who die from a severe brain injury, and who are on a ventilator in an Intensive Care Unit. The brain injury will have damaged the vital centres in the brain stem which are essential to maintain life. Doctors call this 'brain stem death'. This is not the same as being in a coma or 'persistent vegetative state'. Tests are carried out to strict guidelines to show conclusively when this has happened. When brain stem death is pronounced the patient may still be on a ventilator, and have a heart beat which continues to circulate blood around the body. This prevents the organs from losing the oxygen-rich blood supply which is necessary for a healthier transplanted outcome.

Organs can also be donated from people whose death has been certified because their heart has stopped. Certification in these 'non-heart beating' donors is also by doctors who are entirely independent of the transplant team.

## Care and respect

The removal of organs and tissues is carried out with the greatest care and respect. The family can see the body afterwards and staff can contact a chaplain or local religious leader if the family wishes.

## Hinduism and organ donation

There are many references that support the concept of organ donation in Hindu scriptures. Daan is the original word in Sanskrit for donation meaning selfless giving. In the list of the ten Niyamas (virtuous acts) Daan comes third.

**"Of all the things that it is possible to donate, to donate your own body is infinitely more worthwhile."**
The Manusmruti

**"In the joy of others lies our own."**
His Holiness Pramukh Swami Maharaj, BAPS Swaminarayan Sanstha

Life after death is a strong belief of Hindus and is an ongoing process of rebirth. The law of Karma decides which way the soul will go in the next life. The Bhagavad Gita describes the mortal body and the immortal soul in a simple way like the relationship of clothes to a body:

**"Vasamsi jirnani yatha vihaya navani grhnati naro 'parani tatha sarirani vihaya jirnany anyani samyati navandi dehi"**
Bhagavad Gita, chapter 2:22

**"As a person puts on new garments giving up the old ones, the soul similarly accepts new material bodies giving up the old and useless ones."**
Bhagavad Gita, chapter 2:22

Scientific and medical treatises (Charaka and Sushruta Samhita) form an important part of the Vedas. Sage Charaka deals with internal medicine while Sage Sushruta includes features of organ and limb transplants:

**"Organ donation is in keeping with Hindu beliefs as it can help to save the life of others."**
The Late Mr Om Parkash Sharma MBE, President, National Council of Hindu Temples

**"I always carry my donor card with me. It says that my whole body can be used for organ donation and medical purposes after my death. I would like to encourage as many people as possible to do the same."**
The Late Dr Bal Mukund Bhala, Co-ordinator Hindu International Medical Mission, Former President Hindu Council UK

**"I believe in organ donation. If my body can help someone else live a better quality of life after my soul has vacated it then it is good Seva."**
The Late Mr Arjan Vekaria JP, President Hindu Forum of Britain

Information on Hinduism is available from:
**www.bbc.co.uk/religion**